මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை.
The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.:
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2026.06.05

## ஊடக அறிக்கை

### டிஜிட்டல் விலைப்பட்டியல் (Digital Invoicing) முறைமையின் முதலாம் கட்டம் வெற்றிகரமாக நிறைவு; இரண்டாம் கட்ட பணிகள் ஆரம்பம்

வரவுசெலவுத்திட்ட உரை 2026 இற்கு இணங்க, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD) இன்று வரை வெற்றிகரமாக டிஜிட்டல் விலைப்பட்டியல் முறைமையின் (Digital Invoicing System) செயற்படுத்துகையினை முன்னெடுத்துள்ளது. கட்டமைக்கப்பட்ட, கட்ட வாரியான அறிமுகம் (கட்டம் 1 – இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி (SVAT) இனால் பாதிக்கப்பட்ட ஏற்றுமதியாளர்கள், கட்டம் 2 – பெறும்தி சேர் வரி (VAT) பதிவு செய்யப்பட்ட வணிகங்கள் மற்றும் கட்டம் 3 – விற்பனை முனைய (POS) இயந்திரங்களின் அமுலாக்கம்) மூலமாக குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது. இது வரி நிர்வாக வினைத்திறனை மேம்படுத்துதல், பெறுமதி சேர் வரி மீளளிப்புகளை முடுக்கிவிடுதல் மற்றும் இணக்கப்பாட்டை அதிகரித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டதுடன், இந்நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் டிஜிட்டல் பயணத்தை எளிதாக்குகிறது.

**கட்டம் 1: 2025 அக்டோபர் முதல் இணைக்கப்பட்ட ஏற்றுமதியாளர்கள்**

டிஜிட்டல் விலைப்பட்டியல் முறைமையின் முதல் கட்டம் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளின் வலுவான பங்களிப்புடன் வெற்றிகரமாகத் தொடர்கிறது. இதில் 340 க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் தானாக முன்வந்து இணைந்துள்ளதுடன், குறிப்பாக வேகமான பெறுமதிசேர் வரி மீளளிப்பு செயலாக்கம் மூலமாக ஏற்கனவே உறுதியான நன்மைகளை அனுபவித்து வருகின்றன.

டிஜிட்டல் விலைப்பட்டியல் முறைமையானது, முழுமையாக கணினி முறைமை அடிப்படையிலான சரிபார்ப்பை உள்ளடக்கி, மிக வேகமான செயலாக்கத்தின் மூலம் வணிகங்களுக்கு பெறுமதிசேர் வரி மீளளிப்பினை விரைவாகத் திரும்பப் பெறுவதை எளிதாக்குகிறது.

ஆடை ஏற்றுமதியாளர்கள் மற்றும் தேயிலைத் தரகர்கள் மூலமான தேயிலை உற்பத்தியாளர்கள் போன்ற துறைகள் இதில் இணைக்கப்பட்டுள்ளன. இந்தப் பங்குதாரர்கள் தற்போது வேகமான திருப்பிச் செலுத்தும் செயன்முறையிலிருந்து கணிசமானளவு பயனடைகின்றனர். பல சந்தர்ப்பங்களில், அவர்கள் சில நாட்களுக்குள் பணத்தைத் திரும்பப் பெறத் தகுதி பெறுகிறார்கள்.

**கட்டம் 2: பெறுமதி சேர் வரி (VAT) பதிவு பெற்ற வணிகங்களை இணைக்கும் செயன்முறை 2026 ஏப்ரலில் தொடங்கியது**

செயற்படுத்துகையின் இரண்டாம் கட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. இது பெறுமதி சேர் வரி (VAT) பதிவுசெய்த பரந்த அளவிலான வணிகங்களுக்கு தன்னார்வ அடிப்படையில் இந்த முறைமையினை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

இந்த முறைமையில் இணைய விருப்பம் தெரிவித்துள்ள பெரிளவிலான உற்பத்தி மற்றும் சில்லறை விற்பனை நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பாக, குறித்த வணிக நிறுவனங்களுடன் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதுடன், தொழில்நுட்ப ஆவணங்கள் மற்றும் ஒருங்கிணைப்பு வழிகாட்டுதல்கள் ஏற்கனவே 27 ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களுக்கும், 170 பெறுமதிசேர் வரி (VAT) பதிவுசெய்த உற்பத்தியாளர் களுக்கும் பகிரப்பட்டுள்ளன. இது, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மேற்கொண்டுள்ள டிஜிட்டல் பயணத்தில் தனியார் துறை இணைவதற்கான நம்பிக்கையையும் விருப்பத்தையும் காட்டுகிறது.

இரண்டாம் கட்டமானது, பெறுமதிசேர் வரி பதிவுசெய்யப்பட்ட வணிகங்கள், டிஜிட்டல் தளம் வழங்கும் செயற்திறனிலிருந்து பயனடைவதற்கும், சுமுகமானதொரு மாற்றத்திற்குத் தயாராவதற்கும், முன்கூட்டியே இணைந்துகொள்வதற்கான வாய்ப்பை வழங்குவதை உறுதிசெய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**கட்டம் 3: டிஜிட்டல் பயணத்தை விரைவுபடுத்த விற்பனை முனைய இயந்திரங்கள் (POS Machines) அறிமுகப்படுத்தப்படவுள்ளன**

மூன்றாம் கட்டம், பெறுமதி சேர் வரி பதிவு செய்துள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் விற்பனை முனைய (POS) முறைமைகளைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துவதுடன், மேலும் இந்த ஆண்டு இறுதிக்குள் இதன் செயலாக்கம் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக, பெறுமதி சேர் வரிச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. மேலும், உள்நாட்டு இறைவரி ஆணையர் நாயகம், இது தொடர்பான வழிமுறை மற்றும் காலக்கெடுவை அடுத்தடுத்த தகவல்தொடர்புகள் மூலம் குறிப்பிடுவார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் புதியவர்களைச் சேர்க்கும் செயன்முறைகளைத் தீவிரமாக எளிதாக்கி வருவதுடன், பெறுமதிசேர் வரி பதிவு செய்துள்ள அனைத்து நபர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதில் உறுதியாக உள்ளது.

தடையற்ற டிஜிட்டல் இணக்கம் மற்றும் திட்டமிடப்பட்ட அல்லது நிகழ்நேர தரவுப் பரிமாற்றத்திற்காக, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள வலையமைப்பு API ஒருங்கிணைப்பு (Web API integration) மூலம், நிறுவன வளத் திட்டமிடல் (Enterprise Resource Planning - ERP) முறைமைகள் அல்லது தங்களுக்குக் கிடைக்கும் பிற பொருத்தமான தீர்வுகள் போன்ற தங்களது முறைமைகளை வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையுடன் (RAMIS) ஒருங்கிணைக்க, பல்வேறு திறன் நிலைகளைக் கொண்ட வணிகங்கள் உதவுகின்றன.

இலங்கையில் வரி நிர்வாகத்தை நவீனமயமாக்குவதை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க விடயமாக டிஜிட்டல் விலைப்பட்டியல் முன்னெடுப்பு விளங்குகிறது. படிப்படியான அமுலாக்கத்தின் மூலம், வணிகங்களுக்கு ஆதரவளிப்பதோடு, வெளிப்படைத்தன்மை, செயல்திறன் மற்றும் வருமான அறவீட்டை வலுப்படுத்தும் சமச்சீரானதொரு அணுகுமுறையை உறுதி செய்வதை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**